செல்லும் போக்குவரத்துக்கு ஏற்ப லால்குடி நகரப் பகுதிக்குள் இருக்கிற 7 மீட்டர் சாலையை அகலப்படுத்த சாத்தியக்கூறு இல்லை. ஏனெனில், இருபுறமும் கட்டடங்கள் உள்ளன. எனவே வெளியூருக்கு நேராகச் செல்லும் அனைத்து வாகனப் போக்குவரத்துகளும் லால்குடி நகரின் உள்ளே செல்லும்போது உள்ளூர்ப் போக்குவரத்துக்கு இடையூறு ஏற்படுகிறது. இதனைக் கருத்தில் கொண்டு, லால்குடிக்கு முன்பாக உள்ள மாந்துறையிலிருந்து திருமங்கலம், அகலங்கநல்லூர், பூவாலூர் வழியாக லால்குடி நகரின் இடது புறம் அமைந்துள்ள இதர மாவட்டச் சாலைகளை அபிவிருத்தி செய்து, கூழையாற்றின் குறுக்கே ஒரு பாலம் கட்டி நேராகச் செல்லும் கனரக வாகனங்களை இதன் வழியாக அனுமதித்தால் லால்குடி நகருக்குள், உள்ளூர்ப் போக்குவரத்து இடையூறு இன்றி நடைபெற வாய்ப்பு ஏற்படுகின்றது. இச்சாலையின் நடுவே கூழையாற்றின் இருவழிப்பாதை 150 மீட்டர் நீளத்திற்கு உள்ளது. இந்த ஆற்றின் குறுக்கே ஒரு பாலம் கட்டவும், லால்குடிக்கு இடதுபுறம் அமைந்துள்ள புறவழிச்சாலையில் அமையும் இதர மாவட்டச் சாலைகளை 7 கி.மீ. நீளம் உள்ள ஒருவழிப் பாதையிலிருந்து இரு வழிப் பாதையாக ஆக்கவும் ரூ.4 கோடி தேவைப்படும் என மதிப்பீடு செய்யப்பட்டு இருக்கின்றது. வரும் நிதி ஆண்டில் நிதிநிலைமைக்கேற்ப இத்திட்டத்திற்கு முன்னுரிமை கொடுத்து பணிகள் மேற்கொள்ளப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

4. அறிக்கைகள் அளித்தல்

பொது நிறுவனங்கள் குழு

மாண்புமிகு பேரவைத் தலைவர்: குழுக்களின் அறிக்கைகளை அளித்தல். பொது நிறுவனங்கள் குழுவின் அறிக்கைகள் அளித்தல், முனைவர் மு. தம்பிதுரை.

டாக்டர் மு. தம்பிதுரை: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2003-2004 ஆம் ஆண்டிற்கான பொது நிறுவனங்கள் குழுவின் நூற்று நாற்பத்து நான்காவது முதல் நூற்று ஐம்பத்து இரண்டாவது வரையிலான ஒன்பது அறிக்கைகளைக் குழுவின் சார்பாகப் பேரவைக்கு அளிக்கிறேன்.